09.02.2026
O.S.No.191/2009
பி.வா.சா.2.திரு.சாந்தாராம், த.பெ.திரு.ஆர்.என். ராமாச்சாரி

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**முதல் விசாரணை தொடர்ச்சி**

IA No.17/2025, IA 18/2025, IA 19/2025 ஆகிய எண்களில் பிறப்பித்த உத்தரவின் அடிப்படையில் பி.வா.சா.1 தரப்பில் கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சி.

பட்டா எண்.183க்கான R.M.ராமாச்சாரி மற்றும் R.N.ராமாச்சாரி ஆகியோர் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஜமாபந்தி பதிவேடு சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (வாதி தரப்பில் கடுமையாக தெரிவிக்கப்பட்டு ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.)

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இந்த வழக்கில் 2009ம் வருடம் எங்கள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிர்வழக்குரையின் போதோ நான் சாட்சியாக விசாரிக்கப்பட்டபோதோ பி.வா.சா.ஆ.6 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். சுமார் 16 ஆண்டுகள் கலித்து பி.வா.சா.ஆ.6 ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ6 ஆவணத்தில் பசலி ஆண்டு எந்த ஆண்டு என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தில் முனிச்சாமி அய்யர் மகன் ராமாச்சாரி என்று உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் முனிச்சாமி அய்யர் மகன் R.M. ராமாச்சாரி என்று உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.7

ஆவணத்தில் முனிச்சாமி அய்யர் மகன் ராமாச்சாரி என்று உள்ளது என்றாலும் ராமாச்சாரி மகன் ராம்தாஸ் என்று உள்ளது என்றாலும் சரிதான்.

2) 2பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் தகப்பனார் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஜமாபந்தியில் பொதுவாக தப்பனார் பெயரி குறிப்பிடப்படுகிருக்கும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் R.M.ராமாச்சாரி என்று எழுதப்பட்டத்தற்கும் R.N. ராமாச்சாரி என்று எழுதப்பட்டதற்கும் கையெழுத்து வேறுபாடாக காணப்படுகிறது என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.6 ஆவணம் வருவாய் துறை அதிகாரிகள் மூலம்தான் தாக்கல் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்றாலும் நான் தாக்கல் செய்யப்பட்டதற்கு எனக்கு சட்டப்படி உரிமை இல்லை என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை :**</u> இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.